**செ.வெ.எண்.25/2018** **நாள்: 19.01.2018**

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கிட தகுதியான நபர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தொலைநோக்கு பார்வை கொண்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள், பெண்கள் தங்கள் பணிபுரியும் பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்திய திருநாட்டிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் பணிபுரியும் மகளிர்களுக்கு 2017-2018ம் நிதியாண்டு முதல் அம்மா இருசக்கர வாகனம் வழங்கிட உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக பகுதியில் 1539 மகளிர்களுக்கும், நகர்ப்புற பகுதியில் 1810 மகளிர்களுக்கும் ஆகமொத்தம் 3349 மகளிர்களுக்கு பெண்கள் பயன்படுத்த தக்க துணைக் கருவி இல்லாத (Gearless) 125 கொள்திறன் கொண்ட புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க 50 சதவீதம் மானியம் அல்லது ரூ.25000/- இவற்றில் இது குறைவோ அத்தொகையினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அத்தொகை காஞ்சிபுரம் மகளிர் திட்ட அலுவலகம் மூலம் மானியமாக வழங்கப்படும்.

இம்மான்யமானது மகளிர்களின் வாழ்வாதாரத்திற்கு வழங்கப்படுவதால் வாகனத்தினை 5 ஆண்டுகளுக்கு / விற்கவோ மாற்றவோ கூடாது. பயனாளிகள் தங்களது சொந்த நிதி அல்லது வங்கிக்கடன், ரிசர்வ் வங்கி விதிகளின் கீழ் இயங்கும் நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் பெற்று இருசக்கர வாகனம் வாங்கலாம். பயனாளிகளின் கியர் இல்லாத தானே இயங்கும் இருசக்கர வாகனம் அதன் கொள்ளளவு 125 சிசிக்கு மிகாமல் இருக்கும் வாகனத்தினை அவர்களே தேர்வு செய்யலாம். 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட பெண்கள் அதிக தூரம் சென்று பணியாற்றி வருமானம் ஈட்டுபவர்கள் இதன்மூலம் பயன்பெறலாம். ஆண்டு வருமானம் ரூ.2,50,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் இருசக்கர வாகனம் ஓட்டத் தெரிந்தவர்களாகவும், உரிய ஓட்டுநர் உரிமம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் 01.01.2018க்கு பிறகு வாகனம் வாங்கி உள்ளவராக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் மகளிர்கள் பதிவு செய்யப்பட்ட அரசு மற்றும் பொது துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிபவர்கள், தனியார் தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், பல்வேறு அரசு திட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிபவர்கள், சுயமாக தொழில் செய்திடும் மகளிர்கள், சமுதாய அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள், கிராம வறுமை ஒழிப்பு சங்க நிர்வாகிகள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடையலாம்.

அதற்கான விண்ணப்பங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலங்கள், நகராட்சி அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலங்கள் மற்றும் மாவட்ட மகளிர் திட்டம் அலுவலங்களில் இலவசமாக கிடைக்கும்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது இணைக்க வேண்டிய சான்றிதழ்கள் விவரம்**

1. பிறப்பு சான்றிதழ் (வயது 18-40வரை),
2. இருப்பிட சான்றிதழ் (விண்ணப்பதாரரின் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.)
3. ஓட்டுநர் உரிமம்
4. வருமான சான்றிதழ் ( வேலை பார்க்கும் நிறுவனம், சுய சான்று)
5. பணிபுரியும் நிறுவனத்தின் சான்று
6. ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை
7. கல்வித் தகுதிக்கான சான்று
8. பாஸ்போர்ட் அளவு போட்டோ
9. முன்னுரிமை கோருவதற்கான சான்று
10. சாதிச்சான்று (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மட்டும்)
11. மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை
12. வாகனத்திற்கான கேட்பு விலை பட்டியல்

மேற்கண்ட ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 22.01.2018 முதல் 5.02.2018 வரை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிக்குள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலங்கள், பேரூராட்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் அல்லது திட்ட அலுவலர், மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது விரைவு அஞ்சல் / பதிவு அஞ்சலிலோ அனுப்பலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**